இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 161 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 08 – திங்கள்கிழமை 22 ஜனவரி 2024 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 161: Thiruvalluvar Year - 2055 - Thai 08 - Monday 22 January 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00



சேலம் - பெத்தநாயகன்பாளையத்தில் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டு முகப்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இலட்சோப இலட்ச மக்கள் திரளுக்கிடையே கழகக் கொடியை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஏற்றி வைத்தார். உடன் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மாநாட்டுத் தலைவர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் உள்ளனர்.

## அலை அலையென இலட்சோப இலட்சம் பேர் திரண்டனர்!

# சேலத்தை குலுக்கிய இளைஞர் அணி எழுச்சி மாநாடு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு!

## மாநாட்டுத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் 25 தீர்மானங்களை நிறைவேற்றினார்!

**சேலம், ஜன. 22-**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை யேற்று, முன்னின்று நடத்திய, "தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு" மாநில உரிமை மீட்பு முழக்க மாநாடாக, நேற்று (ஜனவரி 21 - 2024 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் - பெத்த நாயக்கன் பாளையத்தில் எழுச்சியும் உணர்ச்சியும் நிறைந்ததாக மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது.**

**இந்த இளைஞர் அணி மாநாட்டில் அலை அலையென திரண்ட இலட்சோப இலட்ச இளைஞர் அணி செயல்வீரர் களால் சேலம் மாநகரமே குலுங்கியது.**

**'இளைஞர் அணி' எனும் கழகத்தின் ஈடு இணையற்ற அமைப்பை, ஊண் உறக்கம் மறந்து, இத்தனை ஆண்டு களாய் தம் தோளில் சுமந்து, அதன் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும், அசைவிலும் தமது பேருழைப்பைச் சிந்தி நெறிப்படுத்தி வளர்த்தெடுத்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு நிறைவுப் பேருரை யாற்றினார்! அப்பேருரையில் இளைஞர் அணி எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளுக்கு வியூகங்கள் வகுத்த ளித்தார்.**

**முன்னதாக கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப் புரையும் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் வாழ்த்துரையும் - கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர் வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள், 'மாநாட்டு ஒருங்கிணைப் பாளர்' உரையும் நிகழ்த்தினர். கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கழகக் கொடி யேற்றி வைத்து உரையாற்றினார்.**

**மாநாட்டில் பல்வேறு சிறப்புக்குரிய தலைப்புகளில் கழக முன்னோடிகளும், கழகத்தின்பால் பேரன்பு கொண்ட பெருமக்களும் சீர்மிகு உரையாற்றினர்.**

**இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் வளர்ச் சிக்கு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு சமூக நீதி உள்ளிட்ட கொள்கைகளை பறைசாற் றும் 25 வரலாற்று தீர்மானங்களை கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளை ஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர் கள் படித்த அத்தீர்மானங்கள் லட்சோப லட்ச இளைஞர்கள் மக்களின் கரவொலிக் கிடையே நிறைவேற்றப்பட்டன.**

**இம்மாநாட்டிற்கு அகில இந்திய காங் கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி உள்ளிட்ட பல்வேறு தேசிய கட்சித் தலைவர்கள் முன்னணியினர் வாழ்த்துத் தெரிவித்து இருந்தனர்.**

இம்மாநாடு பற்றிய விபரம் வருமாறு:-

"தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு" நேற்று (ஜனவரி 21 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் - பெத்த நாயக்கன்பாளையத்தில் நடைபெற்றது.

மாநாட்டுப் பந்தலுக்கு - 'தந்தை பெரியார்' பெயரில் நுழைவாயில்,

திடலுக்குப் பெயரோ, அண்ணா திடல்,

கலைஞர் அரங்கம்,

பேராசிரியர் மேடை,

வீரபாண்டியார் கொடி மேடை,

முரசொலி மாறன் புகைப்படக் கண்காட்சி,

வீரபாண்டி ஆ.ராஜா, வீரபாண்டி செழியன், சந்திரசேகர், 'நீட்' போராளி கள் அனிதா மற்றும் தனுஷ் ஆகியோர் பெயர்களால் தோரண வாயில்கள் என, - மாநாட்டின் ஒவ்வொரு ஏற்பாடும் உணர்ச்சியும், பொருளும் மிக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது.

காலை 9.00 மணியளவில் கழகக் கொடியேற்றலுடன் மாநாடு தொடங்கியது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், கழகக் கொடியினை ஏற்றிவைத்தார்.

இம்மாநாட்டில் வரலாற்று சிறப்பு மிக்க கொள்கை விளக்க 25 தீர்மானங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு தீர்மா னமாக படித்திட 25 தீர்மானங்கள் நிறைவேற்றும் வகையில் மாநாட்டில் குழுமி இருந்த லட்சோப லட்ச - இளைஞர் அணியினர் - கழகத்தினர் - பொதுமக்கள் கரவொலி எழுப்பி தீர்மா னங்களை வரவேற்றிட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலை வர் - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் வரவேற் புரையாற்றினார்.

### மாநாட்டுத் திறப்பாளர் உரை!

காலை 9.45 மணியளவில் - இம் மகத்தான மாநாட்டின் தலைவராக, இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முன் மொழிதலும் வழிமொழிதலும் நடை பெற்றது.

காலை 10.00 மணியளவில், கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், 'மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்' உரை நிகழ்த்தினார்.

10.15 மணியளவில் - அரசு கொறடா கோவி.செழியன், மொழிப்போர்த் தியா கிகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

10.30 மணியளவில், கழக மாண வர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., 'மாநாட்டுத் திறப்பாளர்', உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வுகளை அடுத்து காலை 11.00 மணிக்குத் தொடங்கி, மாலை 6.00 மணிவரை, உணர்ச்சியும் எழுச் சியும் மிக்க பல்வேறு தலைப்புகளில் 'சொற்பொழிவரங்கம்" நடைபெற்றது. இதில்

**இளைஞர் அணி கண்ட களங்கள் -**
**திருச்சி என்.சிவா எம்.பி.,**

**திராவிட மாடல் - எல்லோருக்கும் எல்லாம் -**
**ஆ.ராசா எம்.பி.,**

**நிதித்துறையில் மாநில உரிமைகள் பறிப்பு-**
**அமைச்சர் தங்கம் தென்னரசு**

**தமிழ்நாட்டின் கல்விப் புரட்சி -**
**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

**மொழிப்போர் - இந்தித் திணிப்பு எதிர்ப்பு -**
**கம்பம் செல்வேந்திரன்**

**திராவிட இயக்க முன்னோடிகள் -**
**முனைவர் சபாபதி மோகன்**

**கலைஞர் பாதையில் நம் தலைவர் -**
**திண்டுக்கல் ஐ.லியோனி**

**மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி -**
**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**

**திராவிடம் சொல்லும் மனிதநேயம் -**
**வழக்கறிஞர் அருள்மொழி**

**தலைவர் ஆட்சியில் தொழில்புரட்சி -**
**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**

**கலைஞர் - ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் ஒளிவிளக்கு -**
**அமைச்சர் மதிவேந்தன்**

**கலைஞரின் பேனா -**
**கரு பழனியப்பன்**

**கழக ஆட்சியில் திறன் மேம்பாடும் வேலைவாய்ப்பும் -**
**எம்.எம்.அப்துல்லா எம்.பி.,**

**மருத்துவக் கட்டமைப்பு - இந்தியாவின் முன்னோடி தமிழ்நாடு -**
**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**

**இலக்கியமும் தி.மு.க.வும் -**
**மனுஷ்யபுத்திரன்**

**அவதூறுகளை அடித்து நொறுக்கிடும் கழகம் -**
**வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா**

**சமூக நீதி -**
**வே.மதிமாறன்**

**பத்திரிகையும் திராவிட இயக்கமும் -**
**கோவி லெனின்**

**நீட் விலக்கு நம் இலக்கு -**
**வழக்கறிஞர் ராஜீவ் காந்தி**

**பெரியாரும் பெண் விடுதலையும் -**
**வழக்கறிஞர் செ.ம.மதிவதனி**

**தாயுமானவர் நம் தலைவர் -**
**திருமதி செ.கனிமொழி**

**திருநர் வாழ்வில் திராவிட அரசு -**
**முனைவர் ரியா**

ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### மாநாட்டுத் தலைவர் உரை!

மாலை 6.30 மணியளவில், இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வண் ணம் இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை நடத்தி வாகை சூடும் - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநாட்டுத் தலைமையுரை யாற்றினார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்